<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>
<u>நாள் - 20.02.2023</u>
<u>O.S. 138 /2018</u>

வா.சா 1 ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ரவி என்பவர் எனது மருமகன் என்றால் சரிதான். ரவியிடம் ஏற்கனவே ரூ. 4 லட்சம் கடன் வாங்கிகொண்டு ஒரு ஒப்பந்தபத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. அசல் தொகை 4 லட்சத்திற்கு 96,000 ரூ வட்டி போட்டு அந்த பத்திரத்தை ரத்து செய்த பின்புதான் மீண்டும் எனது பெயரில் ரூ. 9 லட்சத்திற்கு ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்பந்தம் எழுதும்போது ரவி வந்திருந்தாரா என்றால வந்திருந்தார். ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி என்றால் தெரியாது. ஏற்கனவே வாங்கிய கடனுக்காகதான் ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கேவே நாங்கள் 9,00,000 பணம் கொடுத்துள்ளோம். நான் விவசாயம் செய்கிறேன். 9,00,000 ஐ வீட்டில் இருந்து கொடுத்தேன். எப்போது கேட்டார் நான் எப்போது கொடுத்தேன் என்றால் 8 வருங்கள் ஆவதால் ஞாபகமில்லை. பணம் கொடுக்கும் போது குமார், குமாரின் அம்மா கோவிந்தாம்மாள், துரை இருந்தார்கள். எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் அரூர் சார்பதிவாளர் அலுவலகம் அருகே வைத்து கொடுத்தேன் விலை எங்கு பேசினோம் என்றால் அங்கேயே பேசினோம். நேரம் என்ன என்றால் தெரியவில்லை. வியபாரம் பேச யார் வந்தது என்றால் நானும் எனது மருமகனும் வந்தோம். கடன் எவ்வளவு கேட்டார்கள் என்றால் எவ்வளவு கொடுத்தோம் என்றால் அவர்கள் அதிமாக கேட்டார்கள் நாங்கள் 9 லட்சம் கொடுத்தோம். என் வீட்டிற்கே வந்து பணம் கேட்டார்கள். 2, 3 நாட்கள் கழித்து கொடுத்தோம். வேறு யாரும் சாட்சிக்கு வரவில்லை. கடன் பத்திரம் எழுதினோமா என்றால் எழுதினோம். எவ்வளவு நாட்களில் திருப்பி செலுத்தவேண்டும் என்று எழுதினோம் என்றால் பணம் திருப்பி தருகிறோம் என்றதால் ஒ்ப்பந்தம் போட்டார்கள். எவ்வளவு நாட்களில் திருப்பி தருவதாக சொன்னார்கள் என்றால் நாட்கள் ஞாபகமில்லை. 23.07.2015 ல் என்னிடம் வாங்கிய கடனுக்காக வேண்டி 9 லட்சம் பணம் வாங்கி கொண்டு பதிவு செய்யும் போதுதான் 50,000 மீண்டும் வேண்டும் என கேட்டு உடன்படிக்கை ஆவணத்தை ரத்து செய்துதரவில்லை என்றால் சரியல்ல. 9 லட்சம் ரூ பணத்தை பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்துதரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள்தான் பணம் கொடுத்தோம். பிரதிவாதிகள் பதிலுரையில் இந்த விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. பணத்தையும் வாங்கிகொண்டு

அதிகப்படியான பணத்தை பரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்தை யாருக்கு விற்றுவிட்டார்கள் என்றால் பெயர் ஞாபகமில்லை. அந்த சொத்தின் சுவாதீனம் யாரிடம் உள்ளது என்றால் வாங்கியவரிடம் உள்ளது. மேற்படி சங்கதிகள் அனைத்தும தெரிந்திந்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.